DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C. 130 / 2025 |
| Deposition of witness | : | P.W – 1 |
| Name | : | பாண்டியன் |
| Father's /Husband Name | : | கண்ணையன் |
| Village | : | சுரைக்காயூர் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 60 |
| Occupation | : | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 22nd day of Thursday, 2026.

**முதல் விசாரணை** :

நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். மேற்படி எனது வீட்டின் நானும், எனது மனைவியும் திண்ணையில் வசித்து வருகிறோம். ஆஜர் எதிரியால் எனது மகன் எங்களை வீட்டில் சேர்க்காமல் மனைவி மற்றும் குழந்தைகளுடன் வசித்து வருகிறார். கடந்த 19.03.2025-ம் தேதி நான் இரவு 10 மணியளவில் சாப்பிட்டு எனது பேத்தி சஞ்சீவியிடம் தண்ணீர்கேட்டேன் அதற்கு ஆஜர் எதிரியான எனது மகன் சத்தம் போட்டார். பிறகு இரவு 10.00 மணியளவில் நான் வீட்டிற்கு சென்றபோது என்னை குச்சிகாரி மகனே, தேவுடியா மகனே என்ற அசிங்கமான வார்த்தைகளால் பேசி என்னை புளியம்கம்பால் எனது தலையில் தாக்கினார். அதில் எனக்கு காயம் ஏற்பட்டு ரத்தம் வடிந்தது. அதனை எனது மனைவி செல்லம்மாள் தடுக்க வந்தார். பிறகு காயம்பட்ட என்னை திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் எனது மனைவி செல்லம்மாள் அழைத்து சென்றார். சம்பவம் பற்றி எங்கள் எதிர் வீட்டில் வசிக்கும் சகுந்தலா என்பவருக்கு தெரியும். தற்பொழுதும் நான் கட்டிய வீட்டிலேயே என்னை எனது மகன் வீட்டிற்குள் சேர்க்காமல் வீட்டு திண்ணையில் தான் வசித்து வருகிறேன். மேற்படி எனது மகன் என்னை தாக்கிய சம்பவம் தொடர்பாக திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருக்கும் போது வந்து விசாரித்து போலிசார் என்னிடம் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும்புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ-1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் மருத்துவமனையில் இருக்கும்போது இந்த சம்பவம் தொடர்பாக போலிசார் என்னை விசாரனை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
Date: 2026.01.22 12:33:10 +0530